★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம்

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

[மலர் 3] சென்னை: தை 6உ வியாழன் (19—1—56) ★ ★ வெளியூர்: தை 7உ வெள்ளி (20—1—56) [இதழ் 186

ஸ்ரீபிரகாசா சென்னையிலிருந்து மாற்றம்?

புதுடில்லி, ஜன. 18—

கவர்னர் பிரகாசா சென்னை மாநில கவர்னர் பதவியிலிருந்து மாற்றப்படவிருக்கிறாரா என்பது இன்னும் சில நாட்களில் தெரிய வரலாம். அசாம் கவர்னரான ஜெயராம்தாஸ் தௌலத்ராம் பதவியிலிருந்து சீக்கிரமே விலகிக்கொள்கிறார் என்றும், பீகார் கவர்னரான திவாகர் அசாம் கவர்னராகச் செல்வார் என்றும், பீகார் கவர்னராயிருக்க சென்னை கவர்னர் பிரகாசா சம்மதம் தெரிவித்துள்ளார் என்றும் கூறப்படுகிறது. ஆனால், திவாகர் அசாம் செல்ல விரும்பாததினாலேயே இன்னும் இந்த மாற்றங்கள் அமுலாகாமலிருக்கின்றனவாம்.

செங்கோட்டை பிளவுபடுத்தப்பட்டதேன்?

சென்னை அரசாங்கம் ஒப்புதல்மீதே நடைபெற்றதாம்

தி.—கொ. முதலமைச்சர் அம்பலப்படுத்துகிறார்

திருவனந்தபுரம், ஜன. 18—

"செங்கோட்டையைப் பிளவுபடுத்தி, மேற்குப் பகுதியைக் கேரளத்துடனும், மற்ற பகுதியை சென்னை-தமிழகத்துடனும் இணைப்பதற்குச் சென்னை அரசாங்கமும்—திரு-கொச்சி அரசாங்கமும் மனங்கலந்து ஒப்பியதின் காரணமாகவே இந்தியப் பேரரசு அவ்வாறு நடந்துகொண்டுள்ளது"

என்று, திரு-கொச்சி முதல்மைச்சர் பனம்பள்ளி கோவிந்த மேனன் நிருபர்களிடம் அறிவித்துள்ளார்.

செங்கோட்டை முழுவதையும் சென்னையுடன் இணைக்க வேண்டுமென்பது மாகாண சீரமைப்புக் குழுவின் சிபாரிசு ஆகும்.

7 - ஒரிசா மந்திரிகள் பதவி விலகல்

கட்டாக், ஜன. 18—

ஒரிசா மாநிலத்தின் எல்லைக் கோரிக்கைகளை மத்திய சர்க்கார் நிராகரித்துவிட்டதை எதிர்த்து தாங்கள் பதவியிலிருந்து விலகிக்கொள்ள அனுமதி தருமாறு ஒரிசா முதன் மந்திரியிடம் 7 மந்திரிகளும், துணை மந்திரிகளும் கோரியிருக்கின்றனர் என்று தெரியவருகிறது

மேலும், 16 காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களும், பதவியிலிருந்து விலகிக்கொள்ள முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

அறப்போராட்டத்தை அடக்கி ஒழிக்க வேண்டுமாம்!

அடக்குமுறைக்கு ஆச்சாரியார் தூபம்!

"சட்டத்தை மதிக்காது மீறுபவர்மீது, சட்டம் கோருகிறபடி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்; அமைதியையும், ஒழுங்கையும் அலைக்கழிக்கிறவர்கள், விஷமம் செய்வதிலிருந்துத் தடுக்கப்பட வேண்டும்; சட்ட விரோதமான நடவடிக்கை மூலம் வெளிப்படும் எதிர்ப்பானது, நிரந்தரமான விவகாரங்களுக்குப் பரிகாரம் கூறும் பாதுகாப்பான வழிகாட்டியாக இருக்க முடியாது; குறிப்பிட்ட விஷயத்திற்குத் தேவையான அம்சங்கள் அனைத்தையும் மக்கள்சபை அமைதியாக சீர்தூக்கிப் பார்ப்பதின் மூலம் அரசியல் முடிவுகள் உருவாக வேண்டும்."

இக்கருத்தை, சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், திருவாய் மலர்ந்தருளி இருக்கிறார்.

அவர் மேலும் கூறுவதாவது:—

"நான், ஏற்கனவே என் கருத்தை அறிவித்திருக்கிறேன்—அதாவது, சிபாரிசு செய்தபடியோ அல்லது வேறு வகையிலோ மாகாண எல்லைகளைத் திருத்தியமைப்பது அவ்வளவு அவசரமானதல்ல; உடனடியாகவும், அவசரமாகவும் செய்யப்பட வேண்டியனவற்றை செய்து முடிக்கும்வரையில் அதை நிறுத்திவைக்கலாம். நாம் வெறும் நிர்வாக விஷயத்தை மேற்கொள்ளவில்லை; ஆனால், நாம் மனித உணர்வுடன் ஊடாடுகிறோம் என்பதைக் குறிப்பிடத் தேவையில்லை. சரியாகவோ, தவறாகவோ பிரச்சினையில், பலத்த மனித உணர்வு கலந்து இருக்கிறது. இதில் பெரும்பாலானவை வெறும் கற்பனையான சாதகபாதகத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையாகும் என்றே எடுத்துக்கொள்ள வேண்டும்; ஆனால், இம்மாயை மறைந்தொழிவதற்கும், அதன்மீது கட்டப்பட்ட ஆவேசம் தணிவதற்கும் காலம் தேவைப்படுகிறது."

ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் வேலை நிறுத்தம்

ஆறு மாத காலமாகச் சம்பளம் தரப்படாததே காரணம்!

ஆஜ்மீர், ஜன. 18—

கடந்த ஆறு மாத காலமாக தங்களுக்குச் சம்பளம் தரப்படாததை எதிர்த்து, ஆஜ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த சர்க்கார் உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் சுமார் 1,000 பேர் வரை வரும் ஜன. 28-ந் தேதி முதல் சர்க்கார் நடத்தவிருக்கிற 'கல்வி மேளா'வில் கலந்து கொள்வதில்லை என முடிவு செய்திருக்கின்றனராம்.

இன்னும் 15 நாட்களுக்குள் தங்களுக்குச் சம்பளம் தரப்படாவிட்டால், காலவரையறையின்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக ஆஜ்மீர் ஆசிரியர் சங்கம் முடிவு செய்திருக்கிறது.

'பதவியிலிருந்து விலக அனுமதி கொடுக்கவும்'

பீகார் மந்திரி சபையினர் கோரிக்கை

பாட்னா, ஜன. 18—

பீகார் வங்காள எல்லைத் தகராறுகளுக்கு இந்திய சர்க்கார் தந்த தீர்ப்புக்கு எதிராக, தாங்கள் பதவியிலிருந்து விலகிக்கொள்வதற்கு அனுமதி வேண்டுமென காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டாருக்கு, பீகார் மந்திரி சபை சார்பில் டாக்டர் ஸ்ரீ கிருஷ்ண சின்ஹா கோரிக்கை அனுப்பியிருப்பதாகத் தெரிய வருகிறது.

நேருவின் எதேச்சாதிகாரத்திற்கு மராட்டியம் தரும் பதில்

25 பிணங்கள்; 114 முறை துப்பாக்கிப் பிரயோகம்; 1,400 பேர் சிறையில்; 200 பேர் மருத்துவமனையில்

அமைதியிழந்த பம்பாய் நகரம் தரும் சோகக் காட்சி

பல இலட்சம் தொழிலாளர் வேலைநிறுத்தம்

முடுக்கிவிட்ட இயந்திரம்போல, போலீசார், 'கொல்லுவதற்குச் சுடுங்கள்' என்ற உத்தரவு கேட்டதும், துப்பாக்கிகளைச் சுழற்றினர்; சுட்டு வீழ்த்தினர்—25 பேர்களை! 114 முறைகள் துப்பாக்கிகள் குண்டுகளைக் கக்கியிருக்கின்றன; நூற்றுக்கணக்கானோர் குண்டடிபட்டுக் குற்றுயிராய்க் கிடக்கின்றனர்.

பம்பாய் வீதிகளில் ஓலம்; பிணக்குவியல்கள்; தார் பூசிய சாலைகளில் செங்குருதி ஓட்டம்!

விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவுகள், ஊரடங்குச் சட்டங்கள் எல்லாம் மலைமீது வீசிய மண் பாண்டமாகச் சிதறியிருக்கின்றன.

சுமார் 1,400 பேர்களைப் போலீசார் சிறைக்கூடங்களுக்கு இழுத்துச்சென்று அடைத்துள்ளனர்.

பம்பாய் நகரம், அமைதி இழந்து, சூறாவளியில் சிக்கிய மலர்த் தோட்டமாகக் காட்சி தருகிறது.

'பம்பாய் மராட்டியருக்கில்லை' என்ற பெரிய மனிதரின் அக்கிரமத் தீர்ப்பு மராட்டியர் உள்ளத்தை எரிமலையாக்கியிருக்கிறது.

தங்களது நியாயமான கோரிக்கையை—ஆற்றல் முழுவதை

(4-ம் பக்கம் பார்க்க)

'உணர்வு' முழக்கம்

பம்பாய் துறைமுகம் செயலற்று விட்டது; 53 கப்பல்கள் தூங்கி வழிகின்றன; 20,000 துறைமுகத் தொழிலாளர்கள் தாயகத்தின் தலைநகரைக் காப்பதற்கு, நரி கெட்ட இளங்காளைகளைப்போல, கட்டுக்கடங்காத உணர்ச்சியுடன் பம்பாய் வீதிகளை உசுப்பும் காலடிகளால் நசுக்கினர்; 'அடக்குமுறை வீழ்க,' 'அநியாயம் அழிக', 'பம்பாய் மராட்டியருக்கே' — என்று அவர்கள் எழுப்பிய வீரமுழக்கம், வானளாவிய மாளிகைகளில் மோதி விண்ணதிர எதிரொலித்திருக்கிறது.

உண்ணாவிரதம்!

வரும் 22-ந் தேதியன்று சௌபாத்தி கடற்கரையில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில், சங்கர் ராவ் தேவ், மராட்டிய மந்திரிகள் சட்டசபை, மக்கள்சபை உறுப்பினர்கள் ஆகியோரது பதவி விலகல் குறித்து அறிவிப்பார் என்றும், கார்த்திகையார் சொல்லப்பட்ட காலமான ஜனவரி 30-ந் தேதி முதல் அவர் ஒரு உண்ணாவிரதம் மேற்கொள்ளுவார் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கோரிக்கை

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலரும், 'பம்பாய் மந்திரிசபை உடனடியாகக் கலைக்கப்பட வேண்டும் — சட்டசபையும் கலைக்கப்பட வேண்டும்' என்று கோரியிருக்கின்றனர்.

இரயிலை நிறுத்தி காமராசர் முன் ஆர்ப்பாட்டம்

சர்க்கார் அலுவலகத்தின்முன் உரிமை முழக்கம்

மாணவர் பட்டாளத்தின் கண்டனக் குரல்

சென்னை, ஜன 19—

வடநாட்டு ஏகாதிபத்தியம் தமிழர்களுக்கு வேண்டுமென்றே இழைத்துள்ள அநீதியைக் கண்டித்துத் தமிழகமெங்கணும் கண்டனக் குரல் எழுப்பப்பட்டு வருகிறது.

தேவிகுளம், பீர்மேடு முதலிய தமிழ்ப் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் இணையவொட்டாது செய்ய நினைக்கும் இந்தியப் பேரரசின் போக்கிற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், கூட்டங்கள் முதலியன தமிழக நகரங்களில் நித்திய நிகழ்ச்சிகளாகிவிட்டிருக்கின்றன.

தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்த சுமார் 200 தொண்டர்கள் நகரின் முக்கிய வீதிகளில் ஊர்வலமாக வந்து, சர்க்கார் அலுவலகத்திற்குள் புகுந்து ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

அந்த ஊர்வலத்திற்குத் தோழர் கே. விநாயகம், எம்.எல்.ஏ. தலைமை தாங்கி நடத்தியிருக்கிறார்.

டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்ற காமராசர் பிரயாணம் செய்துகொண்டிருந்த இரயிலை, சென்னை-கொருக்குப்பேட்டை அருகே நிறுத்தி சில தோழர்கள், தமிழர்களது கோரிக்கை குறித்து ஒலிமுழக்கம் செய்தனர்; அவர்களைப் போலீசார் கைது செய்து காவலில் வைத்திருக்கின்றனர்.

இதற்கு முன்பாகப் பல தோழர்கள், சென்ட்ரல் இரயில்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 19—1—'56 வியாழன்

மக்களாட்சிக்கு மரண ஓலை!

மக்களின் கருத்தறிந்து, குறிப்பிட்ட ஒரு பிரச்சினையில் முடிவெடுப்பதுதான் மக்களாட்சி முறையாகும். அதைத் தவிர்த்த வேறுமுடிவுகள் எதுவானாலும் அவைகளை எவ்வளவு பெரியவர்—எத்தகைய பற்றற்றப் பண்புடன் வழங்குவதானாலும், அவை வெறும் முதல்தரமான எதேச்சாதிகாரமேயாகும்.

மக்களின் விருப்பறியாத அம்மக்களைப் பொறுத்த ஒரு விவகாரத்தில் அளிக்கப்படும் தீர்ப்பு நூற்றுக்கு நூறு நியாயம் நிரம்பியதாக இருந்தபோதிலும், அதை, மக்களாட்சிக்கு ஒத்தது என ஒப்புக்கொள்ள முடியாது. அது மக்களாட்சி முறையினின்று நீங்கிய வேறு ஒன்றாகத்தான் இருக்க முடியும்.

மக்களாட்சியின் சிறப்புப் பற்றியும், மக்களாட்சி வளர்ச்சி பெற வேண்டியதன் இன்றியமையாமை பற்றியும் அடிக்கடி இந்தியப் பிரதமர் வற்புறுத்திவருகிறார். ஆனால், அவர் மேற்கொள்ளும் செயல் எதுவும் அதன்பாற்பட்டதாகஇருப்பதில்லை.

மக்களாட்சியின் அருமை பெருமை குறித்துப் போதிப்பதில் காட்டும் ஆர்வத்தில்—அக்கரையில் ஒரு துளி அளவைக்கூட, தாம், தொடர்புடைய விவகாரத்தில், செயலில் காட்ட வேண்டுமென்பதை இந்தியப் பிரதமர் எண்ணுவது கிடையாது. இந்த முரண்பாடு, அவர் பெற்றுள்ள கட்டுக்குட்படாத பேரதிகாரத்தின் பெருவிளைவாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் இந்தியப் பிரதமரின் செயலால் ஜனநாயகம் மெள்ள மெள்ள நசித்துக் கொண்டு வருகிறது என்பதே உண்மையாகும்.

மொழிவழியில் மாகாணங்களைத் திருத்தி அமைக்கவேண்டுமென்பது காங்கிரஸ் கட்சியின் பழங்காலக் கோட்பாடாகும். அதன்படி ஆந்திர மொழி மாகாணம் அமைக்கப்பட்டும் இருக்கிறது.

ஆந்திர மாகாண அமைப்பை ஒரு முன்மாதிரியாகக் கொண்டு, மொழி வழி மாகாண அமைப்புக் கிளர்ச்சி உருவெடுத்துத் தீவிரமடைந்தது. அதன் பலனாக மாகாண சீரமைப்புக் குழுவும் நியமிக்கப்பட்டது.

மாகாண சீரமைப்புக் குழு பணியாற்ற வேண்டிய முறை பற்றி இடப்பட்டக் கட்டளையில் மொழிக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்காமல், நிர்வாகம், பொருளாதாரம் ஆகிய வற்றிற்கும் சிறப்பளிக்கப்பட்டது. ஆங்கில ஏகாதிபத்தியம் வகுத்ததும், இன்றுவரை நடைமுறையில் இருந்து வருவதுமான மாகாண அமைப்பில், மொழி நீங்கிய, வேறு நிர்வாகத் துறையில் உள்ள குறைபாடு என்ன என்பதை, அப்பொழுதே விளக்கமாக்கி இருக்கவேண்டும்.

நிர்வாகம் திறமையாக நடத்த முடியாத நிலையில் மாகாணங்களின் அமைப்பு இருந்து வருகின்றது எனக் குறைப்பட்டுக்கொண்டவர்கள் இது வரையில் எவரும் கிடையாது. பன்மொழி பேசும் மக்களைக் கொண்டதாகச் சிற்சில மாகாணங்கள் அமைந்திருக்கின்றன; அவைகளை மொழி அடிப்படையில் திருத்தி அமைக்க வேண்டும் என்றுதான் கோரப்பட்டு வந்திருக்கிறது. அதே அடிப்படையில்தான் காங்கிரசும் மாகாண திருத்தத்தைக் கோரி வந்திருக்கிறது.

ஆனால், மாகாண சீரமைப்புக் குழுவிற்கு இட்ட கட்டளையில், நீண்ட நாட்களாகச் சிறப்பளித்துவந்த மொழி அடிப்படையைப் புறத்தே ஒதுக்கிவிட்டு, நிர்வாகத்தையும் பொருளாதாரத்தையும் முன்னிலைப்படுத்தி விட்டது. என் இந்தப் பின் யோசனை ஏற்பட வேண்டும்? யார் விளக்கந் தருவது?

இந்தியப் பேரரசு இட்டக் கட்டளை எதுவாக இருந்த போதிலும், தான் எடுத்த சிற்சில முடிவுக்கு மொழிக்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது, மாகாண சீரமைப்புக் குழு. திரு-கொச்சியின் தென் கோடி தமிழ்ப் பகுதியை, இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். ஆனால், தமிழர்களே பெரும்பாலோராக உள்ள தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை சென்னை—தமிழகத்துடன் சேர்க்க, மொழியை ஒருபொருட்டாகக் கொள்ள மாகாண சீரமைப்புக் குழு விரும்பவில்லை. அவை இரண்டும் கேரளத்தோடுதான் இருக்க வேண்டும் எனக் குழு சிபாரிசு செய்துவிட்டது.

தேவிகுளம்-பீர்மேடு பகுதிகளில் தமிழர்களே பெரும்பான்மையினராக உள்ளனர். அவர்கள் சென்னை—தமிழகத்துடன் இணைவதையே மனமார விரும்புகின்றனர். இருந்தாலும் சீரமைப்புக் குழு, அவர்களைக்கேரளத்துடன்தான் இருந்தாகவேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறது. மக்கள் விருப்பத்திற்கு மதிப்பளித்து நடக்க மேற்படி குழு தவறிவிட்டது.

குழு, தவறு செய்தபோதிலும், அநீதியாக நடந்து கொண்டபோதிலும், இந்தியப் பேரரசு நீதி வழங்குமென, காங்கிரஸ் கட்சியினர் நம்பிக் கொண்டிருந்தனர். இங்குள்ள காங்கிரஸ் முக்கியஸ்தர்களைக் கடிந்துரைத்துக் கொண்டிருந்த போதிலும், இந்தியப் பிரதமரின் நல்லெண்ணத்தில் நம்பிக்கை வைத்து, முடிவாகத் தமிழர்களுக்கு நேர் நீதி கிடைக்குமென வேறு சில அசல் காங்கிரஸ் வாரிசுகளும் தம்பட்டம் அடித்துக்கொண்டிருந்தனர்.

அனைவருக்கும் இந்தியப் பேரரசு கைவிரித்துவிட்டது. இந்தியப் பிரதமர் பட்டை நாமம் சாத்திவிட்டார்!

மாகாண சீரமைப்புக் குழுவின் சிபாரிசுகளே மேலானது, நேர்மையானது, நியாயமானது எனக் கூறத்தக்க நிலையில், இந்தியப் பிரதமரின் தீர்ப்பு இருக்கிறது. எடுத்துக்காட்டாகச் செங்கோட்டைப் பகுதியைக் குறிப்பிடலாம்.

செங்கோட்டையில் வாழும் மக்களில் 93 சதவிகிதத்தினர் தமிழராவர். அப்பகுதியை சென்னை — தமிழகத்துடன் இணைக்க வேண்டுமெனக் குழு சிபாரிசு செய்தது. அதையும், மலையை மையமாகக் கொண்டு இரண்டாகப் பிளந்து, மேற்குப் பகுதியை கேரளத்திற்கும், கிழக்குப் பகுதியை சென்னை தமிழகத்திற்கும் சேர்த்துவிட்டிருக்கிறார் இந்தியப் பிரதமர்.

இந்தியப் பேரரசின் தீர்ப்பில் நியாயமில்லை, நேர்மை இல்லை, மக்களாட்சி மணமும் இல்லை. எதேச்சாதிகார நெடிநாற்றந்தான் கடுமையாக வீசுகிறது!

தேவிகுளம், பீர்மேடு உள்ளிட்ட தமிழர் பெரும்பான்மையினராக உள்ள கேரளப் பகுதிகளை சென்னை தமிழகத்துடன்தான் சேர்க்க வேண்டுமென, தமிழர் எனப்படுவோர் அனைவரும் ஒரே குரல் கொண்டு கோரினர். சென்னை சட்டசபைகள், தமிழர் விருப்பத்தை உள்ளடக்கித் தீர்மானங்கள் நிறைவேற்றின. இப்பிரச்சினையை ஆராய்ந்து முடிவு கட்ட தங்களைத் தாங்களே நியமித்துக் கொண்ட காங்கிரஸ் மேலிடத்து நால்வரிடம், முதலமைச்சர் காமராசர் உட்பட சில அமைச்சர்களும் காவடி தூக்கிச் சென்று முறையிட்டனர்.

முடிவு—எதேச்சாதிகாரத் தீர்ப்பு கிடைத்திருக்கிறது. தமிழர்களுக்குக் கிடைத்துள்ள அதிக்கிரமத் தீர்ப்பு கண்டு நாம் வேதனைப்படுகிறோம். அதைக் காட்டிலும் நமக்குப் பன்மடங்கு வேதனை அளிக்கிறது, மக்களின் விருப்பத்தை மதிக்க மனங்கொள்ளாது நடந்து கொண்டுள்ள இந்தியப் பிரதமரின் மனப்பாங்கு!

தீர்ப்பு கண்டும், தீர்ப்பளித்தவரின் நிலை கண்டும் நமக்கு வேதனைதான் ஏற்படுகிறதேயல்லாது, அதிர்ச்சி ஏற்படவில்லை. காரணம், நாம் என்றும் அப்பெரியவர்களின் நல்லெண்ணத்தில் நம்பிக்கை வைக்காததும், எதிர்பார்த்தபடியே தீர்ப்பு இருப்பதுமேயாகும்.

இந்தியப் பேரரசு தமிழர்களுக்கு வழங்கியுள்ள தீர்ப்பு மக்களை மதிக்காததாகும். மக்களாட்சிக்கு மரண ஓலை வரைவித்துவிட்டதாகும்!

புதிய அலுமினியம் தொழிற்சாலை

வடநாட்டில் அமைக்க கனடா நிறுவனத் திட்டம்

மான்ட்ரீஸ், ஜன. 17—

ஆண்டொன்றுக்கு 10,000 டன் அலுமினியம் உற்பத்தி செய்யக்கூடிய உலை ஒன்றை இந்தியாவில் அமைக்கும் திட்டம் இருப்பதாக இங்குள்ள அலுமினிய நிறுவனம் ஒன்றின் அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனராம்.

1958-ம் ஆண்டிற்குள் இந்தியாவில் அலுமினிய உற்பத்தி இரட்டிப்பாகும் என்றும், கனடா உலைகளைப் பின்பற்றிப் புதிய உலைகள் துவக்கப்படும் என்றும், இந்த ஆண்டிலேயே வேலைகள் துவங்கும் என்றும் இங்கு கூறப்படுகிறது.

கனடா உலைகள் மாதிரியில் இங்கு அமையவிருப்பவை, ஒரிசா மாநிலத்தில் அமையும் என்றும், இதனை அமைப்பதற்கு 7 கோடியே 50 இ[illegible]ட்சம் ரூபாய் முதலீட்டுச் செல[illegible]கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

அகதிகளுக்குக் கல்வி வசதிகள்

இந்தியப்பேரரசுவாரியிறைத்துள்ள பணம் பற்றி தகவல்

புதுடில்லி, ஜன. 17—

9,000 அகதிகளுக்கு வேலைதரக் கூடிய 36 தொழில்களைப் புதிதாகத் துவக்குவதென, இந்திய சர்க்கார் முடிவு செய்திருப்பதாக அகதி இலாகா செயலாளர் சி. என். சந்திரா என்பார் கூறியிருக்கிறார்.

இதுவரையில் சுமார் 2 இலட்சம் அகதிகளுக்கு சர்க்கார் வேலை தேடித் தந்திருக்கின்றனர் என்றும், தாங்களே தொழில் துவக்கவிரும்பும் அகதிகளுக்குக் கடன் முதலிய வசதிகள் அளிக்கப்படுகின்றன என்றும், 'டாக்டர்'களாகவும், வக்கீல்களாகவும் உள்ள அகதிகள் தொழில் நடத்துவதற்கெனத் தொழில் கடன்களும் தரப்படுகின்றன என்றும் அந்தச் செயலாளர் தகவல் தந்திருக்கிறார்.

அகதி மாணவர்களுக்கு உயர்தரக் கல்வி அளிப்பதற்காகக் கல்லூரிகள் அமைப்பதற்கென இந்திய சர்க்கார் மேற்கு வங்க மாநில சர்க்காரிடம் ரூ. 76 இலட்சம் தந்திருக்கின்றனர்.

மேலும், மேற்கு வங்கத்தில் 5 புதிய கல்லூரிகள் அமைப்பதற்காக ரூ. 42·5 இலட்சம் சீக்கிரமே தரப்படவிருக்கிறது.

இது தவிர, இதுவரை அகதிகளுக்காக இந்திய சர்க்கார் 1,275 பள்ளிக் கூடங்கள் வரை கட்டித் தந்திருக்கின்றனர் என்றும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

சுதேச மன்னர்களை ஒழிக்க பரோடா மன்னர் விரும்பினாராம்!

1908-ல் நடைபெற்ற உரையாடல் குறித்து பணிக்கர் தகவல்

பரோடா, ஜன. 16—

1908-ம் ஆண்டில் பரோடா மன்னரான சயாஜிராவ், ஆகாகானிடத்தில் தனிமையில் உரையாடிக் கொண்டிருந்தபோது, 'என்றாவது ஒருநாள் இந்தியா விடுதலை பெறப் போகிறது; நான் அந்த நாளைக் காண இல்லாது போகலாம்—நீங்கள் இருக்கலாம்; இந்தியா விடுதலை பெற்றதும், சுதந்திர இந்தியாவின் தலைவர்களுக்கு, இந்த மன்னர்களை ஒழித்துக் கட்டுமாறு புத்தி சொல்லுங்கள்; இந்த மன்னர்கள் இருக்கும்வரை, இந்தியா உண்மையான சுதந்திரம் பெற முடியாது' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'இந்த உரையாடல் பம்பாயில் உள்ள சர்க்கார் மாளிகையில் அப்போதிருந்த கவர்னர் நடத்திய விருந்தொன்றிற்குப் பிறகு நடைபெற்றதாகும்' என்று, சர்தார் கே. எம். பணிக்கர், பரோடாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

எகிப்து குடியரசாக மலர்கிறது!

புதிய அரசியல் சட்டம் பிரகடனம்

கெய்ரோ, ஜன. 17—

1953-ல், பரூக் மன்னன் பதவியிலிருந்து விலக்கப்பட்டதைத் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக நிலவிவந்த இராணுவ ஆட்சியை முடித்து, எகிப்து குடியரசாக மலருவதற்கு வழி செய்கிற புதிய அரசியல் திட்டம் நேற்று பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

எகிப்தின் குடியரசுத் தலைவர் தேர்தல், புதிய அரசியல் திட்டப்படி ஜூன் மாதம் 23-ந் தேதி நடைபெறும். பொது மக்கள் வாக்குரிமை அடிப்படையிலேயே இத்தேர்தல் நடைபெறும்.

புதிய அரசியல் திட்டத்தில், பெண்களுக்கும் ஆண்களைப் போலவே வாக்குரிமை அளிக்கப்படுகிறது. இந்த உரிமைக்காக அரும்பாடுபட்ட திருமதி டோரியோ ஷபீகிற்கு, இது ஒரு பெரிய வெற்றியாகும்.

சமூக ஒற்றுமையையும், சமூகப் பொருளாதார நீதியையும் அடிப்படையாகக்கொண்ட சோஷலிச சமுதாய அமைப்புதான் இலட்சியமென்று அரசியல் திட்டம் கூறுகிறது.

ஜனநாயகக் குடியரசு அமைப்பக் கொண்டதாக எகிப்து சர்க்கார் இனி இயங்கும்; அரசாங்க உரிமை இனி நாட்டு மக்களுக்குத்தான்.

★

இலட்சிய விளக்கம்

"மக்கள்தான் அதிகாரத்தின் உறைவிடம்; மக்களிடமிருந்துதான் குடியரசு பிறக்கிறது," என்று, எகிப்து பிரதமர் கர்னல் நாசர், புதிய அரசியல் திட்டத்தை அறிவித்துப் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

"எல்லா சமூக வித்தியாசங்களையும் புதிய அரசியல் திட்டம் ஒழித்துவிடும்; 'திவிலியன்'களுக்குப் 'பட்ட'ங்கள் வழங்குவது தடை செய்யப்படும்" என்றும், பிரதமர் நாசர் குறிப்பிட்டுள்ளார்.

யாரை ஏமாற்றுவதற்கு

புதுடில்லி, ஜன. 17—

எல்லா மாநிலங்களும் ஏற்றத்தாழ்வின்றி ஒரேமாதிரி அபிவிருத்தியடைய வேண்டுமென்று மத்திய சர்க்கார் எண்ணம் கொண்டுள்ளதாம்!

மற்ற மாநிலங்களைவிடப் பின்தங்கிய மாநிலங்களுக்கு, மத்திய சர்க்கார் அளிக்கும் மானியத்தை அதிகரிப்பதுபற்றிய பிரச்சினையை ஆராயும்படி, விரைவிலேயே நியமிக்கப்படவிருக்கும் நிதிக் குழு கேட்டுக் கொள்ளப்படுமாம்.

'பனி மனிதன்' கொலை?

கேபா, ஜன. 17—

போக்கார் மலைசாதியினர், 10 அடி உயரமுள்ள வெண்ணிறமான பயங்கரப் 'பனி மனிதனை' வடகிழக்கு இந்திய மலைப் பிரதேசத்தில் கொன்றுவிட்டதாகத் தகவல்கள் எட்டியுள்ளனவாம்.

அந்தப் பனி மனிதன் இனத்தைச் சேர்ந்தவர்கள் இந்தப் பகுதியில் வாழ்ந்து வருவதாக மலைசாதியினர் நம்பிக்கொண்டிருக்கின்றனராம்.

தமிழகமெங்கும் திராவிடர் திருநாள்

'தைப் பொங்கலன்று திராவிடர் திருநாள் கொண்டாடுவீர்' என்று தி. மு. கழகப் பொதுச்செயலாளர் தந்திருந்த அறிக்கைக்கு ஒப்ப, நாடெங்கும் கழகத் தோழர்களும், பொதுமக்களும் வெகு சிறப்பாக விழாக் கொண்டாடியிருக்கின்றனர்.

சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கல், எளியோருக்கு உணவளித்தல், விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், சிறப்புக் கூட்டங்கள் கூட்டுதல், இசை அரங்கம்-நாடகம் நடத்துதல் போன்ற நிகழ்ச்சிகளுடன் விழாசகள் நடைபெற்ற விபரங்கள் இங்கு சுருக்கித் தரப்பட்டுள்ளன :—

சென்னை:

1-வது வட்டம் தி. மு. க.

14—1—56 காலை 9-30 மணியளவில் தோழர் க. அறிவழகன் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் தி. வ. செங்கல்வராயன், து. கோவிந்தசாமி ஆகியோர் திராவிடர் திருநாளைப் பற்றிப் பேசிய பின்னர், தோழர் பொ. சம்பந்தன் முன்னிலையில் 300 ஏழைகளுக்குப் பொங்கல் வழங்கப்பட்டது.

3-வது வட்டம் தி. மு. க.

14—1—56 காலை 8 மணிக்கு விழா துவங்கிற்று. தோழர் எஸ். பாண்டியன் கொடியேற்றினர். கழகப் பணிமனை அலங்கரிக்கப்பட்டு, தெருக்களில் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. 300-க்கு மேற்பட்டவர்களுக்குக் காலையில் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது. பொங்கல் காட்சியினைக் குறிக்கும் ஒரு பெரிய படம் வரையப்பட்டு, கழக அறைக்கு வெளியே மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது.

9-வது வட்டம் தி. மு. க.

14—1—56 காலை 8 மணிக்கு சென்னை எழுகிணறு தி மு. கழக சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கரும்பு, மஞ்சள் செடி, நெற்கதிர், தென்னை ஓலைத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட வண்டியினை இசைக் குழுவினருடன் வீதிகள்தோறும் இழுத்து வரச் செய்தனர் பகல் 1 மணிக்கு ஏழைகளுக்கு இனிப்புப் பொங்கல் வழங்கப்பட்டது. தோழர்களுக்குத் தேநீர் வழங்கப்பட்டது.

37-வது வட்டம் தி. மு. க.

14—1—56-ல், சென்னை இராயப்பேட்டை தி. மு. கழகப் (37-வது வட்டம்) பணிமனை, தோரணங்களால் அழகுற அலங்கரிக்கப்பட்டது. காலை 8 மணிக்குத் தோழர் ஏ எல். கே. சாமி கழகக் கொடியேற்றுவித்தார். பின்னர் காலை 9 மணிக்கு தோழர் மு அர்ச்சுனன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் டி ஞானசேகரன், பொ. நா. சண்முகம், சோ இளவரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர் தோழர் பொ. ஏழுமலை முன்னிலையில் 200-க்கு மேற்பட்ட ஏழைகளுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது.

திருவல்லிக்கேணி கே.எஸ். பாண்டியன் படிப்பகம்

15—1—56 மாலை 6 மணிக்கு, படிப்பகத்தில் தோழர் எல். சேர்பால் தலைமையில் துவங்கப் பெற்றது. தோழியர் அலமேலு அப்பாதுரை உள்ளிட்ட தோழர்கள் பலர் பொங்கல் விழா பற்றிப் பேசினர்.

மஜீத் மன்றம்

14—1—56 காலை 9 மணியளவில், சென்னை 12-வது வட்டம் மேற்படி மன்றக் கட்டிடத்தில் தோழர் செல்வராசன் தலைமையில் விழா கொண்டாடப்பட்டது. தோழர் காஞ்சி-மணிமொழியார் கழகக் கொடியை ஏற்றுவித்தார். தோழர் நா. சேரன் வரவேற்புரை ஆற்றினர். பின்னர் தோழர்கள் என். பி கோபால், காஞ்சி-மணிமொழியார் ஆகியோர் பொங்கல் விழா பற்றியும், தற்கால அரசியல் நிலை குறித்தும் விளக்கவுரை ஆற்றினர். விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

மக்கள் மன்றம்

பெத்துநாய்க்கன் பேட்டையிலுள்ள மேற்படி மன்றத்தின் சார்பில், 14—1—56 அன்று காலை சுமார் 2,500 ஏழைகளுக்கு தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் தலைமையில், அண்ணா அவர்கள் உணவு வழங்கினர்.

முத்தமிழ் மன்றம்

14—1—56 காலை 9 மணியளவில் சென்னை சாலைவிநாயகர் கோயில் தெருவிலுள்ள மேற்படி மன்றப் பணிமனை கொடிகளால் அலங்கரிக்கப்பட்டது. விழாவின் போது, பள்ளிச் சிறார்களுக்கும், தோழர்களுக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன. தோழர் கா. வி இராதாகிருட்டிணன் தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில் தோழர்கள் பலர் விழா பற்றி பேசினர்.

இலட்சிய நடிக மன்றம்

9-வது வட்டத்திலுள்ள மேற்படி மன்றச் சார்பில் விழா கொண்டாடப்பட்டது. வீதிகள்தோறும் தோழர் வி. முனுசாமி எம் சி தலைமையில் தோழர்கள் கைத்தறி ஆடைகள் விற்றனர். விழாவிற்குத் தோழர் எம். எஸ் முத்துகிருஷ்ணன் தலைமை வகித்தார். தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். பகலில் ஏழைகளுக்கு உணவளிக்கப்பட்டது.

வள்ளுவர் படிப்பகம்

14—1—56 காலை 11 மணிக்கு 34-வது வட்ட (நுங்கம்பாக்கம்) வள்ளுவர் படிப்பகத்தின் சார்பில், தோழர் இ. சு கிள்ளிவளவன் தலைமையிலும், தோழர் வ. சங்கரநாராயணன் முன்னிலையிலும் சுமார் 300 பேர்களுக்கு மேல் பொங்கல் வழங்கப்பட்டது.

வள்ளுவர் இளைஞர்மன்றம்

15—1—56 காலை, தோழர் எம். ராஜு தலைமையில், புதுவண்ணையிலுள்ள மேற்படி மன்றச் சார்பில் நடைபெற்ற விழாவில், தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். விழா இறுதியில் சர்க்கரைப் பொங்கலும், இனிப்பும் வழங்கப்பட்டன.

திருவள்ளுவர் முன்னணிக் கழகம்

சென்னை பழைய வண்ணையம்பதி (5-வது 'வட்டம்) திருவள்ளுவர் முன்னணிக் கழகச் சார்பில் 15—1—56 காலை, தோழர் இ. கு கரிகாலன் தலைமையில், சிறுவர் - சிறுமியர்களுக்குப் பாலும், இனிப்பும், நடுப்பகலில் தோழர் மு கிருட்டிணன் தலைமையில் ஏழைகளுக்கு உணவும் வழங்கப்பட்டது மாலை 6 மணிக்கு தோழர் அ. நபிதாசன் தலைமையில் திரு மல்லையா குழுவினரின் இன்னிசை விருந்தும் நடைபெற்றது

★

கட்டிமேடு (தஞ்சை மா.)

14—1—56 காலை 7½ மணிக்கு, நகரின் முக்கிய வீதிகளில் கழகத் தோழர்களால் கழகக் கொடிகள் ஏற்றி வைக்கப்பட்டன.

இராசபாளையம்

14—1—56 மாலை 6 மணிக்கு இந்நகர் பெரியகடைத் தெருவிலுள்ள வள்ளுவர் நூல் நிலையத்தில், நகர சபைத் தலைவர் எஸ் எஸ். அர்சுன ராசா தலைமையில் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சோமசுந்தரம், சா. மார்க்கண்டேயன், ஏ. ஆர். பொன்னையா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சேலம் 19-வது வட்ட தி. மு. கழகம்

13—1—56 மாலை 7 மணிக்கு சேலம் 19-வது வட்டம் தி. மு கழகச் சார்பில், அம்மாப்பேட்டை மெயின்ரோடு சாலியர் தெருவில், தோழர் கே. ஆர். மாசிலாமணி தலைமையில் கழக ஆண்டு விழாவும், திராவிடர் திருநாளும் கொண்டாடப்பட்டது. தோழர்கள் ஏ. மாரியப்பன் எம்.சி., எஸ்.-ஏ. அன்புக்கரசு, ஈ. ஆர். கிருஷ்ணன், சித்றளி-சுப்பிரமணியம், வி. சிவப்பிரகாசம் ஆகியோர் பேசியபின், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தி. மு. கழக அரசியல், பொருளியல், சமுதாய இயல் ஆகியவை பற்றியும், வடநாடு தென்னாட்டைப் புறக்கணிப்பது பற்றியும் விளக்கி சொற்பொழிவாற்றினர்.

காதக்கோட்டை

14—1—56 மாலை 6 மணிக்கு தோழர் கே. எஸ். சிரங்கராயர் தலைமையில் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் க சின்னமுத்துசாமி தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. தோழர்கள் க. சின்னமுத்துசாமி, என். பொன்னுசாமி, என். குப்புசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றியபின், கயிறு இழுத்தல், பளுத் தூக்குதல், அடி தாண்டுதல் ஆகிய போட்டிகள் நடைபெற்றன. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சிறந்த பரிசளிக்கப்பட்டது. கலந்து கொண்ட அனைவருக்கும் தித்திப்பு வழங்கப்பட்டது.

தியாகைசெருவல்

13—1—56 மாலை 5 மணிக்கு தியாகை செருவல் தி. மு. கழகத்தின் சார்பில், தோழர் பொ. சதாசிவம் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஆர். பாலகுருசாமி, பொன்னம்பலம், பச்சமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கிருஷ்ணபுரம் 6-வது வட்டம்

குன்றை கிருஷ்ணபுரம் 6-வது வட்ட தி. மு. கழகத் தோழர் ஏ. மசீத் அவர்கள் இல்லத்தில், 13—1—56-ல் சுமார் 150 ஏழைக் குழந்தைகளுக்குக் கஞ்சி ஊற்றப்பட்டது. 14—1—56-ல் பொங்கல் விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

வெள்ளலூர் (கோவை மாவட்டம்)

14—1—56 காலை 10 மணியளவில், மேற்படி ஊரில் கழகத் தோழர்களால் கொடியேற்று விழா நடைதெற்றது. தோழர் பி. ராமசாமி தலைமை தாங்கி கொடி ஏற்றினர். விழா இறுதியில் எல்லோருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது.

சின்னாளப்பட்டி

14—1—56 மாலை 6 மணிக்கு, தோழர் எம். வீரணன் தலைமையில், தி. மு. கழகச் சார்பில் விழா நடைபெற்றது. தோழர் ஏ. எம். டி. நாச்சியப்பன் கொடி ஏற்றினர் தோழர்கள் பலர் பேசினர். விழா இறுதியில் பொதுமக்களுக்குப் பொங்கலும், கரும்பும் வழங்கப்பட்டன.

வத்தராயன்தெத்து

14—1—56 மாலை 5 மணிக்கு, தோழர் தருமலிங்கம் தலைமையில் விழாக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. பல இடங்களில் புதிதாக தி.மு கழகக் கொடிகள் ஏற்றுதலும், ஊர்வலமும் நடைபெற்றது தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

திருப்புத்தூர்— (ராமநாதபுரம் மாவட்டம்)

14—1—56-ல், திருப்புத்தூர் தி. மு கழகச் சார்பில், மூ. வே. மன்றத்தில் சிறுவர்களுக்கு கரும்பு வழங்கப்பட்டது. பஸ் நிலையத்தில் புதிதாகத் தி. மு கழகக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது.

தல்லாகுளம்

14—1—56 அன்று பெருமாள் கோயில் திடலில் விழா நடைபெற்றது. காலை 11 மணிக்கு, தோழர் க. பாண்டியன் கொடி ஏற்றிவைத்துச் சொற்பொழிவாற்றியபின், சிறார்களுக்குப் பொங்கல் வழங்கப்பட்டது. மாலை ஓட்டப் பந்தயங்கள் நடைபெற்றன. பந்தயத்தில் வெற்றி பெற்ற இளைஞர்களுக்கு தோழர் இராஜாராம் பரிசுகள் வழங்கினர். இரவு 8 மணியளவில் இசை விருந்து நடைபெற்றது.

பாலசமுத்திரம்

14—1—56 இரவு 7 மணியளவில் தி. மு. கழகச் சார்பில் தோழர் எம். ரெங்கசாமி தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர் மு. வசனப்பித்தன் பொங்கல் விழாவின் சிறப்பு, நாட்டுப் பிரிவினையின் அவசியம், இன்றைய அரசியல் நிலை பற்றிச் சொற்பொழிவாற்றினர். இரவு 10 மணிக்கு பழநி 'எழில் கலைஞன்' குழுவினரின் 'நாட்டுப் பிரிவினை' என்ற கலா நிகழ்ச்சி நடைபெற்றது.

சொக்குப்பிள்ளைபட்டி

15—1—56 காலை 8-30-மணிக்கு, தோழர் இராமன் தலைமையில், கிளைக் கழகத் துவக்க விழாவும், திராவிடர் திருநாள் விழாவும் கொண்டாடப்பட்டது. தோழர் சையது இப்ராகிம் கழகக் கொடியேற்றி வைத்தார். தோழர்கள் முகதா, இராசாராம், செல்லம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கொப்பம்பட்டி

16—1—56 காலை 8-30-மணிக்கு, இரா. நெடுஞ்செழியனார் படிப்பகத்திலிருந்து அண்ணா உருவப் படத்தைத் தவிச்சக்கர வண்டியில் வைத்து, மலர்மாலைகள் சூட்டி, இசைக் கருவிகள் முழங்க, கழகத் தோழர்கள் கொடிகளைத் தாங்கிக்கொண்டு ஊர்வலம் வந்தனர். பின்னர் தோழர் என். அரங்கசாமி கழகக்கொடி ஏற்றுவித்ததும், தோழர் என். அரங்கசாமி தித்திப்புகள் வழங்கினர்.

கீழப்பாவூர்

13—1—56 இரவு 8 மணிக்கு, பாண்டியன்மைதானத்தில் தோழர் பி. ஆர். வைகுண்டம் தலைமையில் பொங்கல் விழாவை முன்னிட்டு, மறுமலர்ச்சி நாடக மன்றத்தாரால் 'குற்றவாளி' என்னும் நாடகம் நடத்தப்பட்டது. 14—1—56 காலை 9 மணிக்கு, நகரின் பல பாகங்களிலும் கொடியேற்றி வைக்கப்பட்டது. பி. ஆர். சிவன் அவர்களது இன்னிசை நடைபெற்றது.

கோவிலூர்

14—1—56ல், அலங்கா நல்லூரை அடுத்த கோவிலூர்க் கிராமத்தில், தி. மு கழகச் சார்பில், தோழர் அ. இரத்தினசாமி தலைமையில் விழாக் கொண்டாடப்பெற்றது. தோழர் ப. வெள்ளைச்சாமி கழகக் கொடியேற்றினர். பின்னர் பெரியதோர் காலநடை ஊர்வலம் நடைபெற்றது. இறுதியில் ஏராளமான சிறுவர்கட்கும், பெரியவர்கட்கும், தாய்மார்கட்கும் பொங்கல் வழங்கப்பட்டது.

எமநேசுபுரம் (பரமக்குடி)

14—1—56-ல் எமநேசபுரம் அண்ணா படிப்பகச் சார்பில், படிப்பகத் திடலில், தோழர் எஸ். தண்டபாணி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

சுந்தரபாண்டியம்

15—1—56ல் சுந்தரபாண்டியம் அண்ணா திடலில் தி மு கழகச் சார்பில் தோழர் ஆதிமூலம் தலைமையில் விழா நடைபெற்றது. மதுரை எம். பி. ஏ. லட்சுமி-சக்தி குழுவினர்களது இன்னிசை விருந்து நடைபெற்றது. சுற்றுக் கிராமங்களிலிருந்து பெருவாரியான மக்கள் திரண்டு வந்திருந்தனர்.

உத்தரவு தந்த [illegible]!

தண்ணீர் வரி கட்டாதவர்களின் வீடுகளுக்குத் தண்ணீர் 'சப்ளை'யை நிறுத்திவிடுமாறு [illegible] நகர சபைத் தலைவர் கண்டிப்பான ஓர் உத்தரவு பிறப்பித்தாராம்!

மறுநாளே அவர் வீட்டில் தண்ணீர் வரவில்லை. வரி கட்டாதவர்களின் [illegible] அவரும் ஒருவராம்!

அவருக்கு வரி செலுத்த வேண்டிய பட்டியல் கிடைக்காமலிருந்ததாம்.

பழனி

16—1—56ல், பொங்கல் விழாவை முன்னிட்டு, பழனி நகர் தி. மு. கழகத்தின் சார்பில் சைக்கிள் பந்தயம் நடைபெற்றது. 11 மைல் தூரம் சென்று திரும்பிய தோழர் சேது அவர்கள் 1-வது பரிசு பெற்றார். 2-வது பரிசு தோழர் முத்துச்சாமி பெற்றார். 3-வது பரிசு தோழர் வெள்ளையனுக்கு அளிக்கப்பட்டது. அப்பரிசுகளை, நகரசபைத் துணைத் தலைவர் திரு. இராசகோபால் வழங்கினர்.

பரமக்குடி

தி மு. கழகச் சார்பில், 14-1-56 காலை 9 மணிக்கு சுமார் 250 பேருக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டது. கழகக் கட்டடம் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மூங்கில்பாடி

14—1—56 மாலை 4 மணிக்கு, தோழர் க. அர்ச்சுனன் தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. மாலை 5 மணிக்கு தோழர் க. கு. செல்லபிள்ளை கொடியேற்றிய பின், தோழர் எம். வடிவேல் தலைமையில் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

தண்டாரம்பட்டு

14—1—56 அன்று ஊராண்மைக் கழகத் தலைவர் தோழர் பா. சிதாபதி தலைமையில் திராவிட இளைஞர் கழகச் சார்பில் விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் ப, உ. சண்முகம், வேணுகோபால் ஆகியோர் திராவிடர் திருநாள் பற்றி விளக்கமாகப் பேசினர். விழாவை யொட்டி பல போட்டி விளையாட்டுக்கள் நடைபெற்றன. வெற்றி பெற்றவர்களுக்கு விழாத் தலைவர் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன.

சலகண்டபுரம்

15—1—56 காலை 5 மணிக்கு, தோழர் அ மு. அண்ணாமலை இல்லத்தில் விழாக் கூட்டம் நடைபெற்றது. கட்டுரை, கவிதை, நாடகம் முதலிய நிகழ்ச்சிகள் மாலை 5 மணி வரை நடைபெற்றன. மாலை 6 மணிக்கு, திரு.வி.க. திடலில், தோழர் எல். இராமநாதன் தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் க. அன்பழகன், ப. கண்ணன், புதுமைவாணன், கு. பெ. சீனிவாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் க. அன்பழகன் அவர்களுக்கு நேரமங்கலம் தி. மு கழகக் கிளையின் சார்பில் கைத்தறித் துப்புத் துண்டும், குரப்பள்ளி கழகத்தின் சார்பாக நூல் மாலையும் அணிவிக்கப்பட்டன.

பெங்களூர்-அக்கிபேட்டை

15—1—56 காலை 10 மணியளவில், கழக மனையில், தோழர் டி. எ துரைசாமி தலைமையில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. தோழர்கள் பி. டி. இரத்தினம், சி. உலகநாதன், ஜே கனகசுந்தரம், ஏ. டி. பிரான்சிஸ் ஆகியோர் பொங்கல் விழா கொண்டாட பட வேண்டியதின் அவசியத்தைப் பற்றிப் பேசினர். விழாவில் கூடியிருந்த பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

ஏழைகளுக்குக் கஞ்சி

22—1—56 பகல் 1 மணிக்கு, வ. ஆ. மாவட்டம் திருப்பத்தூர் சி. எம். எல். நினைவு மன்றத்தில், பொங்கல் விழாவை முன்னிட்டு, ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

எதேச்சாதிகாரத்திற்கு மராட்டியம் தரும் பதில்...

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

யும் தோண்டையில் தேக்கி—மராட்டியர், விண்ணதிர முழங்குகின்றனர்—'பம்பாய் மராட்டியருக்கே' என்று!

மதிப்புப் பெற வேண்டிய இடங்களில் எல்லாம்—நகர சபை, சட்ட சபை, மக்கள் சபை இங்கெல்லாம்—தங்கள் உரிமைக் குரல் உரிய மதிப்பைப் பெருது போகவே, மராட்டியரில் தீவிரவாதிகளாயிருப்போர், இனி சட்டரீதியான வழிகளில் தங்கள் உரிமை—நியாயம் நிலைநாட்டப்பட முடியாதென எண்ணுவதில் தவறில்லை.

மராட்டியரில்—நகர சபை, சட்ட சபை, மக்கள் சபை போன்ற பிரதிநிதித்துவ சபைகளில் உறுப்பினர்களாக வீற்றிருப்போர் கூட்டம் கூட்டமாகப் பதவிகளைத் துறக்க முடிவு செய்திருக்கின்றனர்.

திராவிடத்தில் வடவர் ஆதிக்கத்திற்கு எதிராகத் திரண்டெழுந்துள்ள விடுதலைப் படை, முறையாகத் தட்டிக்கொண்டிருக்கும் போர் முரசின் பேரொலியை மனதில்கொண்டு, வடநாட்டு ஏகாதிபத்திய மூலவர்கள், 'இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்றுவீர்' என்ற உபதேசத்தை உரத்த குரலில் கூறிவருகின்றனர்; அவர்களது 'ஒற்றுமை உபதேசம்' பம்பாய் நகரில் பெற்றிருக்கும் வெற்றிகள் தான் இப்போது சம்பவங்களாக உருவெடுத்திருக்கின்றன. 'டில்லி தேவதை'களின் ஒற்றுமை உபதேசம், கயிறு அறுந்த காற்றாடியாக பம்பாய்க் கடற்கரையில் வட்டமிட்டுக்கொண்டிருக்கிறது—கடலில் வீழ்ந்து அலையில் சிக்கிச் சின்னாபின்னமாவதற்காக!

இழைக்கப்பட்ட அநீதி தூண்டிய ஆத்திரத்திற்கு அடிமைப்பட்டுவிட்ட மராட்டியர், வெறி கொண்டவர்களைப்போலப் பம்பாய் வீதிகளில், 'என்ன செய்கிறோம்' என்ற உணர்வில்லாத நிலையில், சம்பவங்களைச் சிருஷ்டித்துக் கொண்டிருக்கின்றனர். மராட்டியத் தலைவர்களாலேயேகூடக் கட்டுப்படுத்த முடியாத உணர்ச்சி வெள்ளம் பிரவாகமெடுத்திருக்கிறது.

'பெரிய மனித'ரின் அநியாயப் போக்கு பிறப்பித்த ஏமாற்றம் கோபமாக உருவெடுத்து, மராட்டியரை இயக்கி வருகின்றது.

தங்களது உயிர்நிகர் ஆசைகளை வெளிப்படுத்த மராட்டியர் கண்ணில் பட்ட வண்டிகளை, காங்கிரஸ் அலுவலகங்களை, சர்க்கார் கட்டிடங்களைக் குறியேதுமின்றி குருட்டுத்தனமாக—ஆனால், மூர்க்கத்தனமாகத் தாக்கியிருக்கின்றனர்.

புகை மண்டலங்களைக் கக்கிக்கொண்டு, 'ஓ'வென்ற பேரிரைச்சலுடன் இரவும் பகலும் வேலை செய்யும் 62 பெரும் நெசவாலைகள் வேலை செய்யவில்லை; அவற்றைச் சேர்ந்த 2,50,000 தொழிலாளர் பெருமக்கள், ஆலை இயந்திரங்களை இயக்கி பேரிரைச்சலை எழுப்புவதை விடுத்து, ஆலைகளுக்கு வெளியே வீதிகளிலே கூடி நின்று, 'பம்பாய் மராட்டியருக்கே' என்று முழங்கி நிற்கின்றனர்.

சர்க்கார் அதிகாரிகள் தங்களிடமுள்ள துப்பாக்கிக் குண்டுகளின் துணையைத் தான் நம்பியிருக்கின்றனர்; மராட்டியரோ, தங்களது கொதிக்கும் குருதியை—புடைத்து நிற்கும் தசைக் கோளங்களை—அனல் கக்கும் விழிகளை—உள்ளத்தில் பொங்கி வழியும் வீராவேசத்தை நம்பிக் கிடக்கின்றனர்.

இயங்கவில்லை

இரயில் வண்டி, பஸ், டிராம் போக்கு-வரத்து இவை எவையும் இயங்க முடியவில்லை. நகரின் போக்கு-வரத்து சாதனங்கள் அத்தனையும் நிலை நின்று போய்விட்டன.

தோற்றம்

அமைதி குலைந்த பம்பாய் நகரில், எங்கு பார்த்தாலும் சாரை சாரையாக ஆர்ப்பாட்டக்காரர்களின் அணிவகுப்புகள், கண்டன ஊர்வலங்கள், போலீசாரின் நடமாட்டம், தடியடி, துப்பாக்கி வேட்டுச் சத்தம் இவைதான் காணவும் கேட்கவும் முடிந்தன.

விவரிக்க இயலாத குழப்பத்தில் பம்பாய் நகரம் சிக்கிக்கொண்டிருக்கும் காட்சி பரிதாபகரமாயிருக்கிறது.

ஊரடங்குச் சட்டம்

பம்பாய் நகர போலீஸ் அதிகாரிகள் ஊரடங்குச் சட்டம் பிறப்பித்திருக்கின்றனர்; பல பகுதிகளில் கூட்டங்கள், ஊர்வலங்கள் கூடாதென மூன்று நாளைக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

மராட்டியரின் ஆவேசமான தாக்குதல்களைச் சமாளிக்க போலீசார்—ஏன்—இராணுவத்தினருடைய அசுர பலம்கொண்ட இயந்திரத் துப்பாக்கிகளால்கூட முடியாதுபோல் தெரிகிறது.

பெல்காமில்

பெல்காமிலும் இரண்டாவது நாளும் போலீசார் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டு மனித வேட்டையாடியிருக்கின்றனர்; பயங்கரமான விளைவுகளையும் எதிர்நோக்கிய வண்ணம் கூட்டம் கூட்டமாக மக்கள், தடையுத்தரவுகளை, ஊரடங்குச் சட்டங்களை உடைத்தெறிவதின் மூலம் ஆதிபத்திய வாதிகளின்—எதேச்சாதிகாரிகளின் உத்தரவுகளை—உபதேசங்களை அழுகிய பண்டங்களை ஏற்று நிற்கும் குப்பைத் தொட்டிகளுக்குள் அள்ளிவீசி வருகின்றனர்.

ஆர்ப்பாட்டங்கள் ஓயவில்லை; அடக்குமுறை வலுத்துவருகிறது.

பதவிகளை 'உதறினர்'

இதற்கிடையில் பம்பாய் நகரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரசாரான 5 சட்டசபை உறுப்பினர்கள் தங்கள் பதவிகளை உதறி எறிந்திருக்கின்றனர்.

திராவிடா திருநாள்

★

மேலக்கற்கண்டார்கோட்டை

திரு. வி. க. திடலில்

21—1—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு
அம்பில் தர்மலிங்கம்
டி. பி. அழகமுத்து

★

மரவாபாளையம்

21—1—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: காளியப்பன்

பேசுவோர்:

சத்தியவாணிமுத்து
எம். எஸ். மணி
எம். பழனிச்சாமி

சேலம் மாவட்ட தி. மு. கழக செயலாளர்கட்கு

"உறுப்பினர் பதிவு விண்ணப்பத் தாள்களை இன்னும் சில கிளைகள் பெற்றுக்கொள்ளவில்லை. உறுப்பினர் சேர்க்கும் கடைசி நாள் 31-1-56-தான். ஆதலால், உறுப்பினர் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள் பெருத கிளைகள், மாவட்டக் கிளைக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

"தாள்களைப் பெற்றுக் கொண்ட கிளைகள், வேறு கிளைகளுக்கோ, கழகம் ஆரம்பிக்கவிருக்கும் பொறுப்பாளர்களுக்கோ அத்தாள்களைக் கொடுக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். எல்லோரும் நேரடியாக மாவட்டக் கிளை களிடமிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டும்.

"உறுப்பினர்கள் சேர்த்த விபரத்தை விண்ணப்பத் தாள்களில் உள்ளபடி மாவட்டக் கிளைக்கு ஒரு 'நகல்' அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, சேலம் மாவட்ட தி. மு. கழகத் துணைச்செயலாளர் தோழர் பி. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

திருக்குறள் வகுப்பு

21—1—56 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை-பெத்தநாய்க்கன்பேட்டை, எண் 15, முத்துகிருஷ்ணன் தெருவில், தாய்மார் கழகச் சார்பில், திருக்குறள் வகுப்பு நடைபெறும்.

'இந்தியை ஆட்சி மொழி ஆக்குக'

உ. பி. இந்தி வெறியர் தீர்மானம்

சட்டசபையில் 'வாபஸ்'

லக்னோ, ஜன. 18—இந்தியப் பேரரசின் முழு ஆதிக்கம் பெற்றிருக்கும் உத்தர பிரதேச இந்தி வெறியர்கள், தங்கள் மாநிலத்திலேயே ஆட்சி மொழியாக இந்தியைக் கொண்டுவர முயன்று தோல்வி கண்டிருக்கின்றனர்.

உத்தர பிரதேச சட்டசபையில் கடந்த சனிக்கிழமையன்று ராணா ஜெயசிங் என்ற உறுப்பினர், மாநிலத்தின் எல்லா அரசாங்க அலுவல்களும் இந்தி மொழியில் நடைபெற வேண்டும் என்று தனிப்பட்ட முறையில் மசோதா ஒன்று கொண்டுவந்தார்.

இந்த மசோதாவை எதிர்த்து அரசாங்கத்தின் சார்பில் செய்தி இலாகா மந்திரி பேசுகையில், 'இப்போதுள்ள நிலவரத்தில், உடனடியாக மாநில மொழியான இந்தியை எல்லா அரசியல் அலுவல்களுக்கும் உபயோகிப்பதால் பலவித இடையூறுகள் ஏற்படும்' என்று விளக்கம் தந்தாராம்.

பின்னர், தீர்மானத்தைக் கொண்டுவந்த உறுப்பினரே அதனைத் திரும்பப் பெற்றுக்கொண்டாராம்.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசுகையில் அவரும், பின்னர் பேசிய சில இந்தி வெறியர்களும், 'இந்தி மொழியை நிர்வாகத் துறைக்கு அரசாங்கம் உபயோகித்து அதன் மதிப்பை உயர்த்த சர்க்கார் தவறிவிட்டது' என்று குறைகூறிப் பேசியிருக்கின்றனர்; இதுவிஷயத்தில் அரசாங்கத்தைக் கண்டித்துக் காரசாரமாகவும் பேசியிருக்கின்றனர்; என்றாலும், 'இந்தியை எல்லா அரசியல் வேலைகளுக்கும் உபயோகிப்பது சாத்தியமானதல்ல; அவ்வேலைகளுக்குரிய தகுதி இந்திக்கு இன்னும் வரவில்லை' என்று சர்க்கார் சார்பில் தெரிவிக்கப்பட்டதால் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாம். 'தீர்மானத்தை விவாதிப்பதா, வேண்டாமா?'—என்பது குறித்து வாக்கெடுக்குமாறுகூட யாரும் துணியவில்லையாம்!

மாணவத் தோழர்களின் எழுச்சி...

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

நிலையத்தில் கூடி, காமராசர்முன் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

இன்று காலை, முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் ஆயிரம் பேர்வரை ஊர்வலமாக வடசென்னை வீதிகளில் ஒலிமுழக்கங்களுடன் ஊர்வலம் வந்தனர்.

நேற்றும் தியாகராயர் கல்லூரி மாணவர்கள் 800 பேர்வரை கண்டன ஊர்வலம் நடத்தியிருக்கின்றனர்.

காரைக்குடி நகரில் உள்ள கல்லூரி உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பலர், டில்லி ஆட்சியாளரின் எதேச்சாதிகாரப் போக்கை எதிர்த்துக் கண்டனம் தெரிவித்து ஊர்வலம், பொதுக்கூட்டம் நடத்தியிருக்கின்றனர்.

காஞ்சி, விருதுநகர் போன்ற ஊர்களிலும் மாணவர்கள் டில்லி ஆதிபத்தியப் போக்கிற்கு எதிராகத் திரண்டெழுந்து எதிர்ப்புக் குரல் தந்திருக்கின்றனர்.

இன்று, சென்னையிலுள்ள பல கல்லூரி மாணவர்களும் ஊர்வலம், கூட்டம் முதலியனவற்றில் கலந்துகொண்டிருக்கின்றனர்; நிலைமை வேகமாக வளர்ந்துவருகிறது.

மாணவர்கள் மீது போலீஸ் தடியடி

கூட்டத்திற்கும் தடை

சென்னை, ஜன 19—சென்னை தியாகராயர் கல்லூரியைச்சேர்ந்த சுமார் 500 மாணவர்கள் நேற்று காலை வண்ணாரப்பேட்டையிலுள்ள கல்லூரியிலிருந்து புறப்பட்டு பல தெருக்கள் வழியே அமைதியாக ஊர்வலமாக சென்று மாலை 3 மணிக்கு சைனா பசார் வந்துசேர்ந்தார்கள் வழியில் சென்டிரல் பாலிடெக்னிக் முத்தையாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றைச்சேர்ந்த சுமார் 200 மாணவர்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டார்கள்.

பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளிக்குமுன் ஊர்வலம் வந்துகொண்டிருந்தபோது ஒரு போலீஸ் வானில் மலபார் விசேடப் போலீசார் வந்திறங்கினர். அவர்கள், ஊர்வலம் உடனே கலைக்கப்பட வேண்டுமென்று கட்டளையிட்டனர் ஆனால், மாணவர்கள் மறுத்துவிடவே அவர்களைத் தடிகளால் பலமாகத் தாக்கி ஊர்வலத்தைக் கலைத்தனர். ஊர்வலத்தை முன்னின்று நடத்திச்சென்ற மாணவர் தலைவர்களைக் கழுத்தைப் பிடித்து முரட்டுத்தனமாகத் தள்ளினர்.

சென்டிரல் பாலிடெக்னிக்கைச் சேர்ந்த தோழர் சீனிவாசன் என்ற மாணவரை முரட்டுத்தனமாகக் கழுத்தைப் பிடித்துத் தள்ளி இழுத்துக்கொண்டுபோய் போலீஸ் வானில் ஏற்றி பூக்கடை போலீஸ் நிலையத்திற்குக் கொண்டுசென்றனர்.

கலைந்து சென்ற மாணவர்கள் மீண்டும் ஒன்றுகூடி சட்டக் கல்லூரி மைதானத்திற்குச் சென்று அங்கு கூட்டம் நடத்த முயற்சித்தார்கள். இதற்கிடையில் கைது செய்யப்பட்ட மாணவர் விடுதலை செய்யப்பட்டார். சட்டக் கல்லூரி போலீஸ் நிலையத்தைச் சேர்ந்த போலீஸ் இன்ஸ்பெக்டர், கூட்டம் நடத்தினால் தடியடிப்பிரயோகம் செய்யப்படும் என்று கடுமையாக எச்சரிக்கவே கூட்டம் அமைதியாகக் கலைந்தது.

• • •

விருதுநகர் மாணவர் எழுச்சி

18—1—56ல், விருதுநகர் செந்திக் குமார் நாடார் கல்லூரி மாணவர்களும், சுப்பையா நாடார் பள்ளி மாணவர்களும் வகுப்புகளுக்குச் செல்லாமல், தேவிகுளம், பீர்மேடு பற்றிய இந்திய சர்க்கார் முடிவை எதிர்த்து, 'நேருவின் எதேச்சாதிகாரத் தீர்ப்பு ஒழிக,' 'காமராசர் மந்திரி சபை ராஜிநாமா செய்க,' என்று முழக்கமிட்டுக்கொண்டு நகரின் முக்கிய வீதிகளில் ஊர்வலமாகச் சென்றனர்.

'ஓட்டல்களுக்குச் செல்ல மாணவர்களை அனுமதியாதீர்'

'காசைக் கரியாக்குகிறார்கள் — நேரத்தை வீணுக்குகிறார்கள்' எனக் குறிப்பு

லாகூர், ஜன. 18—பாகிஸ்தான் பஞ்சாப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், லாகூரில் உள்ள கல்லூரித் தலையாயர்களுக்கெல்லாம் அனுப்பியுள்ள உத்தரவு ஒன்றில், உணவு விடுதிகள், சிற்றுண்டிச்சாலை ஓட்டல்கள் ஆகியவைகளுக்கு கல்லூரி மாணவர்கள் செல்லாது தடுக்குமாறு கேட்டுக்கொண்டிருக்கிறார் எனத் தெரியவருகிறது.

கல்லூரித் தலையாயர்கள், தேவையானால் ஓட்டல்களில் புகுந்து திடீர் சோதனை செய்து மாணவர்களைக் கண்டுபிடிக்குமாறும் கேட்டுக்கொண்டிருக்கிறாராம்.

அந்தத் துணைவேந்தர் 'கல்லூரி மாணவர்கள் பலர் ஓட்டல்களுக்குச் சென்று காசைக் கரியாக்குவதுடன், நேரத்தையும் வீணுக்குகிறார்கள் என்று கருதுகிறாராம்!

தன்னைக் கடித்த பாம்பை திரும்பக் கடித்துக் கொன்ற மனிதன்!

கேப் டவுன், ஜன. 15—இங்கிருந்து 70 மைல் தொலைவில் உள்ள ஓர் இடத்தில், சீட்டர் கெம்பிஸ் என்பார், ஒரு பாம்பைப் பிடித்து அதனைத் தன் நண்பர்களுக்குக் காட்டிக்கொண்டிருந்த பொழுது அது அவரைக் கடித்ததாம்; உடனே அவர், பாம்பு கடித்தக் காயத்திலிருந்து இரத்தத்தை உறிஞ்சித் துப்பிவிட்டு, பாம்பைத் திரும்பிக் கடித்தாராம்; இதனால் பாம்பு இறந்துவிட்டதாம்!

கறுப்பு உடையுடன்

அ. நி. சபையில் எதிர்க்கட்சியினர்

கராச்சி, ஜன. 18—பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை, நகல் அரசியல் திட்டத்தைப் பற்றி விவாதிப்பதற்காக இன்று கூடியபோது, அரசியல் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு அறிகுறியாக எதிர்க்கட்சியினரான அவாமிலீக் உறுப்பினர்கள், 'கறுப்புச் சட்டை'களை அணிந்து கொண்டு சபைக்கு வந்திருந்தனராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.